| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மை கல்வி அலுவலர்,<br>(சென்னை மற்றும் பாண்டிச்சேரி<br>நீங்கலாக) |

ந.க.எண். 022738 /டி/2021 நாள் : 24 .11.2021

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6. தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறனாய்வுத் தேர்வு (Trust Examination) ஜனவரி 2022 தேர்வு நடத்துதல் – குறித்து.

**பார்வை :** 1 அரசாணை நிலை எண்.960 கல்வித் துறை (இ2) நாள் 11.10.91

2 அரசாணை நிலை எண். 256, பள்ளிக் கல்வித் துறை (இ2) நாள் 22.12.08.

*********

அரசுத் தேர்வுத் துறையால் ஆண்டு தோறும் தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான "ஊரகத் திறனாய்வு தேர்வு" பார்வை 1–ல் கண்ட அரசாணையின் படி நடைபெற்று வருகிறது.

<u>**தகுதியான தேர்வர்கள்**</u>

இத்தேர்விற்கு ஊரகப் பகுதியில் அதாவது கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2021 – 2022 ஆம் கல்வியாண்டில் 9–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்திறனாய்வு தேர்வு எழுதுவதற்கு தகுதி படைத்தவராவார்கள். **நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.**

<u>**ஆண்டு வருமானம்**</u>

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ, **1,00,000/– க்கு (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும்.**

<u>**விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்தல்**</u>

**30.01.2022** அன்று நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேர்வுக்கான வெற்று விண்ணப்பங்களை **06.12.2021** முதல் **14.12.2021** வரை www.dge.tn.gov.in என்ற அரசு தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளம் மூலம் **பள்ளித் தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து,** அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட வெற்று விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கி பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் வருவாய்ச் சான்றினையும் இணைத்து **14.12.2021 க்குள்** பெற்றுக்கொள்ள வேண்டும்.

..2..

**<u>தேர்வுக் கட்டணம்</u>**

ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் தேர்வுக் கட்டணமாக ரூ.**10**–னை பணமாகப் பெற்றுக் கொள்ளவேண்டும். தலைமையாசிரியர்கள் இணைப்பில் கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி 'ONLINE' –ல் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

**<u>விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்தல்</u>**

தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட அவ்விண்ணப்பங்களை பள்ளிக்கு வழங்கப்பட்ட USER ID, Password மூலம் தலைமை ஆசிரியர் தேர்வர்களின் அனைத்து விண்ணப்பங்களையும் **09.12.2021** முதல் **20.12.2021** வரை Online மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்படி தேதிக்கு பிறகு பதிவு செய்வது இயலாது என்பதால் தேர்வர்கள் பாதிக்கப்படா வண்ணம் **20.12.2021** க்குள் பதிவு செய்து இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தை செலுத்துமாறு. தெரிவிக்கப்படுகிறது. பதிவேற்றம் முடிந்த பிறகு Summary Report, பள்ளியில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் (தேர்வர்களின் விவரங்களுடன்) முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைத்திட பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்த வேண்டும்.

**<u>தகுதியான பள்ளிகளை அனுமதித்தல்</u>**

**முதன்மைக் கல்வி அலுவலர்கள் தலைமையாசிரியரால் பதிவு செய்த விவரத்தினை பெற்று அப்பள்ளிகள் ஊரகப் பகுதியைச் சார்ந்ததுதானா என்பதனை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.** தேர்வுக்கு (அரசாணை எண். **960** Education (E2) Department நாள் **11.10.91** பத்தி எண் 4(i) ல் குறிப்பிட்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) தகுதியுள்ள பள்ளிகளின் பதிவு செய்த மாணவர்களின் விண்ணப்பங்களை முதன்மைக் கல்வி அலுவலரின் பொறுப்பில் வைத்துக் கொண்டு தகுதியற்ற பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக நீக்கம் செய்ய வேண்டும். பின்னரே தேர்வு மைய இணைப்புப் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

**<u>தேர்வு மைய இணைப்பு</u>**

**ஒரு தேர்வு மையத்தில் அதிக பட்சம் 300 தேர்வர்கள் வீதம் ஒரு அறையில் 20 மாணவர்கள் எழுதும் வகையிலும், மாணவர்கள் தொலைதூரம் சென்று தேர்வு எழுதா வண்ணம் தேர்வர்கள் விண்ணப்பிக்கும் பள்ளி அமைந்துள்ள ஒன்றியத்திலேயே அனைத்து வசதிகள் நிறைந்த பள்ளியினைத் தெரிவு செய்து, இணைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும். NTSE தேர்வினுக்கு தெரிவு செய்யப்பட்ட மையங்களே பொருந்துமாயின் (அதே ஒன்றியம்) அம்மையங்களிலேயே தெரிவு செய்து, இணைப்புப் பள்ளியினை மேற்கொள்ளலாம்.** முதன்மைக் கல்வி அலுவலர்கள் www.dge.tn.gov.in என்ற இணையத்தளத்தில் "Click to access online portal" என்ற வாசகத்தினை கிளிக் செய்தால் தோன்றும் திரையில் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு இத்துறையால் ஏற்கனவே வழங்கியுள்ள User Id Password – ஐ பயன்படுத்தி **21 .12.2021 முதல் 29 .12.2021 வரை இணைப்புப் பணியினை மேற்கொள்ள வேண்டும்.**

**வினாத்தாள் கட்டுக் காப்பாளர்**

முதன்மைக் கல்வி அலுவலரே இத்தேர்வுக்கு வினாத்தாள் கட்டுக் காப்பாளராக இருப்பார். வினாத்தாள் கட்டுக் காப்பாளர் தேர்வு மையங்களுக்குரிய வினாத்தாள் கட்டுக்களை, தேர்வு தொடங்க ஒரு மணி நேரம் முன்னதாக தேர்வு மையத்தில் கொண்டு சேர்க்கும் வகையில், துறை அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**தேர்வுப் பணிக்கு அலுவலர்களை நியமித்தல்**

தேர்வு மையங்களுக்குரிய தலைமைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், தேர்வறை, உதவி கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து நியமனங்களையும் செய்வது முதன்மைக் கல்வி அலுவலரின் பொறுப்பாகும். இத்தேர்வுப் பணிக்கு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறும், தேர்வுக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் விவரத்தினை அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 என்ற முகவரிக்கு **10.01.2022** க்குள் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தாங்கள் ஆன்–லைன் மூலம் தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி தேர்வெழுதுவதற்கு பதிவு செய்யப்பட்ட மொத்தத் தேர்வர்களின் எண்ணிக்கை குறித்தான பதிவு தான் இறுதியான தேர்வர்களின் எண்ணிக்கையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தேர்விற்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து தேர்வர்களுக்கு வழங்குதல் மற்றும் பதிவேற்றம் செய்வது குறித்தான விவரங்களை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை / இடைநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் அறிவுரைகளை தவறாது பின்பற்றி தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>இணைப்பு</u>: 1.** அரசாணை எண் **960** Education (E2) Dept Dated 11.01.91

2. அரசாணை நிலை எண். **256**, பள்ளிக் கல்வித் துறை **(இ2)** நாள் **22.12.08.**
3. அறிக்கை

**<u>நகல்</u> :**

1. ஆணையர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 6– பணிந்து அனுப்பலாகிறது.
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
4. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்.

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6</u>

<u>ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST EXAM), JANUARY 2022</u>

**<u>நடைபெறவுள்ள தமிழ் நாடு ஊரகப் பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்</u>**

**<u>தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :</u>**

**2021-2022-ம்** கல்வியாண்டில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள், 2022 ஜனவரி மாதம் 30–ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு (TRUST) விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

1. அரசு ஆணை (நிலை) எண். 960, (இ2) துறை, நாள் 11.10.91 ன் படி ஊரகப் பகுதிகளில் (அதாவது கிராமப்புற பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப்), அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2021–2022 கல்வியாண்டில் 9–ம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியர் இத்திறனாய்வு தேர்வு எழுதுவதற்கு தகுதி படைத்தவராவார்கள்.

2. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் தேர்வரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. **1,00,000 /–** மிகாமல் உள்ளது என்பதற்கு வருவாய் துறையினரிடமிருந்து வருமான சான்று பெற்று அளித்தல் வேண்டும்.

3. தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவ, மாணவியர்கள் தேர்வுக்கான கட்டணம் ரூ, 5/– சேவைக் கட்டணம் ரூ. 5/– மொத்தமாக ரூ. 10/– வீதம் **<u>Online மூலம் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன்</u> <u>பணமாக</u>** பள்ளி தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**தேர்விற்கு விண்ணப்பிக்க நாள் <u>09.12.2021 முதல் 20.12.2021</u> வரை என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் 100 நபர்களுக்கு (50 மாணவியர் + 50 மாணவர்) 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கும் காலத்திற்கு படிப்புதவித் தொகை ஆண்டு தோறும் ரூ. 1000/– வீதம் வழங்கப்படும். **தேர்வெழுத வரும் தேர்வர்கள் கருப்பு நிற பந்துமுனை பேனாவினை (Black Ball Point Pen) மட்டுமே பயன்படுத்த வேண்டும்.**

குறிப்பு: நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் படிக்கும் மாணவ/மாணவிகள் விண்ணப்பிக்க இயலாது.

## <u>பொதுவான அறிவுரைகள்:-</u>

- **தேர்வர்கள் ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு (TRUST) விண்ணப்பிக்க பள்ளிக்கு வரும்பொழுது கட்டாயம் முகக்கவசம் (Mask) அணிந்து வர வேண்டும்.**
- **போதிய சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்.**

ஒம்/–

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,

சென்னை–6.

# PROCEDURE

## TRUST EXAM 2021-2022 EVENTS

www.dge.tn.gov.in

↓

**CLICK** - ACCESS TO ONLINE PORTAL

↓

TRUST EXAM - JAN 2022
APPLICATION REGISTRATION

↓

School Registration

↓

ENTER - USER ID - PASSWORD
(UDISE CODE) (EMIS NO)

**Step 1** : (i) Instructions for Existing School in EMIS Portal

(ii) Instructions for Schools (Which does not have account in EMIS Portal)

**Step 2** : (i) After Registration Process.

**Step 3** : Instructions for EMIS Registered school to enroll their students.

**Step 4** : How to apply - Enroll the students does TRUST exam.

(i) for schools under EMIS.

(ii) for schools not in EMIS.

**Step 5** : How to pay TRUST Exam Enrollment Fees.

**Step 6** : How to General the report for applied students.

ஆகிய **6** படிநிலைகளை (Step 1 to Step 6) முடிந்தவுடன் Summary Report மற்றும் விண்ணப்பங்களை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்